# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
# சட்டபீடம்

## சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு IV (நிகழ்நிலை), 2021

## புலமைச் சொத்துச்சட்டம்
(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**எவையேனும் மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. இலங்கையின் பதிப்புரிமைச் சட்டத்தின் அடிப்படையில், பின்வரும் சூழ்நிலைகளில் எழுகின்ற சட்டச்சிக்கல்கள் தொடர்பில் ஒவ்வொரு நிகழ்விலும் உள்ள தரப்பிரனருக்கு ஆலோசனை வழங்குக.

அ. பிரியா என்ற பாடகி *"Lassana Mage Rata"* என்ற பாடலைப்பாடியதன் பின்னர் புகழ்பெற்றாள். முழுப் பாடல்வரிகளும் 50இற்கு மேற்பட்டிருந்தாலும், சேர்ந்திசையில் (chorus) உள்ள இரு வரிகள் மிகவும் பிரபல்யமாகின. இன்னொரு பாடகியான மாயா என்பவள் பதிவுசெய்த *"Sundara Mage Rata"* எனத் தலைப்பிடப்பட்ட பாடலானது ஏனைய 48 பாடல்வரிகளும் வேறுபட்டிருந்தாலும், *"Lassana Mage Rata"* இனது சேர்ந்திசையில் இருந்த அதே இரு வரிகளை அப்பாடல் கொண்டிருந்ததனைப் பிரியா கண்டாள். ஒத்த தன்மை மிகவும் சிறியதொரு பகுதியொன்றாகும் என்பதனால் பதிப்புரிமை மீறலொன்றினை அது ஏற்படுத்தவில்லை என்பதாக பிரியா இதுபற்றி மாயாவிடம் வினவியபோது அவள் கூறுகிறாள்.

ஆ. பல்கலைக்கழக மாணவனான கமல் என்பவன், பெருந்தொற்றின்போது, தனது ஓய்வு நேரங்களில் திரைப்படங்களைப் பார்ப்பதனை வழக்கமாக்கிக் கொண்டிருந்தானாயினும் அவற்றை அணுகுவது மிகவும் விலை உயர்ந்ததெனவும் கண்டான். தனதும் தனது நண்பர்களின் பிரத்தியேகமான சேகரிப்பிலிருந்துவந்த படங்களை மக்கள் இலகுவாக உள்நுழைந்து இலவசமாகப் பார்க்கக்கூடியதான இணையத்தளமொன்றினை நண்பர்கள் குழுவொன்றுடன் இணைந்து அவன் ஆரம்பித்தான். இந்த நடவடிக்கையிலிருந்து எந்தவிதமான பணமும் அவன் சம்பாதிக்கவில்லை.

இ. கட்டடக்கலைக் கலைஞரொருவரான நதீரா என்பவரின் வாடிக்கையாளருக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்ததான சொகுசு உல்லாசப்போக்கிட தங்குமிடமொன்றினை (eco-

friendly luxury resort hotel) தனித்துவமான அமைப்பொன்றில் வடிவமைப்பதற்கான உறுதிப்பாட்டில் பெருந்தொகைப் பணமொன்று அவருக்குச் செலுத்தப்பட்டது. *"Kurulu Villas"* எனப் பெயரிடப்பட்ட அத் தங்குமிடம் கட்டப்பட்டு ஆறுமாதங்களின் பின்னர் அந்த இடத்திற்கு அருகில் *"Kurulu Villas"* போன்று தோற்றமளிக்கும் மற்றொரு தங்குமிடம் கட்டப்பட்டுள்ளதனை அவ்வாடிக்கையாளர் அறிகின்றார்.

(100 புள்ளிகள்)

2. கோவிட் 19 பெருந்தொற்றின் பல்கலைக்கழகத்தின் விளைவின் ஒரு பகுதியாக, செலானாப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் துறைப் பேராசிரியரொருவரின் தலைமையிலான ஆய்வுக்குழுவொன்று, வைரஸ், இரத்தம் அல்லது பிற நீர் சார்ந்த கறைகளைக் கொண்ட ஏதாவது வளிமக்கரைசல் துகள்களை விரட்டவும் அழிக்கவும், சுற்றுச் சூழலுக்கு உகந்த, உயிரியாற் சிதைவுறும், செலவு குறைந்த மற்றும் மீள்பாவனைக்கு ஏற்ற முகக்கவசமொன்றினைப் பல மாத விரிவான ஆய்விற்குப் பின்னராக உருவாக்கியது. சந்தையில் கிடைக்கப்பெறக்கூடிய ஏனைய முகக் கவசங்களுடன் ஒப்பிடுகின்றபோது, பன்முகத் தொழிற்பாட்டினைக் கொண்ட இந்த முகக்கவசம் கழிவுச்சுமை மற்றும் சுற்றுச் சூழலின் தாக்கம் இரண்டினையும் குறைக்கின்றது. இத் தயாரிப்பை வணிக ரீதியானதொன்றாகப் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான முக்கியமான தேவையினைக் கருத்தில் கொண்டு, இக் கண்டுபிடிப்பிற்கு ஆக்கவுரிமைப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ள இவ்வாராய்சிக் குழு விரும்புகின்றது.

நீர் இலங்கையில் ஆக்கவுரிமைச் சட்டத்தரணியொருவரெனவும் அவ்வாராய்சிக் குழுவானது உம்மை நாடிகின்றதெனவும் கருதிக்கொள்க. ஆக்கவுரிமையைப் பதிவுசெய்யும் நடைமுறையில் அவர்கள் எதிர்நோக்கக்கூடிய சாத்தியமான சட்டச்சிக்கல்களை மதிப்பிட்டு இலங்கை மற்றும் வெளிநாடு இரண்டிலும் இந்தக் கண்டுபிடிப்பிற்கான ஆக்கவுரிமை குறித்து ஆலோசனை வழங்குக. பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் வழக்குத் தீர்ப்பினை மேற்கோள்காட்டி உமது ஆலோசனையை ஆதரிக்க.

(100 புள்ளிகள்)

3. இலங்கைத் தேசிய புலமைச்சொத்துக்கள் அலுவலகத்தின் வரத்தகக்குறிப் பரிசோதகரென உம்மைக் கருதிக்கொள்க. உம்மால் பெறப்பட்ட பின்வரும் விண்ணப்பங்களின் பதிவுசெய்யும் இயலுமை பற்றி உமது காரணத்துடனான கருத்தை வழங்குக.

அ)ஆண்களுக்கான மணம்போக்கும் திரவியமொன்றினை (mens' deodorant) சந்தைப்படுத்துவதற்காக *"Adventurous"* எனும் சொற்களுடன் கடற்கரையொன்றில்

பெண்ணொருவர் வெள்ளைக்குதிரையொன்றில் சவாரி செய்யும் படமொன்றினைக் கொண்ட ஒரு குறி. ஆண்களின் வாசனைத் திரவியத்தினை (mens' perfume) சந்தைப்படுத்துவதற்காக *"Adventure"* எனும் சொற்களுடன் கடற்கரையொன்றில் கறுப்புக் குதிரையொன்றில் ஆணொருவர் சவாரி செய்யும் படமொன்றினைக் கொண்ட பதிவுசெய்யப்பட்ட குறியொன்று ஏற்கனவே உள்ளது.

ஆ) இலங்கையின் மத்திய பிரதேசத்தினைச் சேர்ந்த நெய்த பாய் உற்பத்தியாளரால் சமர்ப்பிக்கப்பட்ட*"Dumbara village Mats"* என்ற சொற்களைக் கொண்ட ஒரு குறி.

இ) பற்பசை வகையொன்றினைச் சந்தைப்படுத்துவதற்கு ஆச்சரியக் குறியொன்றினை உள்ளடக்கிய ஒரு குறி.

ஈ) விளையாட்டுப் பாதணிகளுக்கு *"Tike"* பெயரிலான ஒரு குறி. மத்திய கிழக்கு முழுவதும் நன்கு அறியப்பட்ட இதே போன்றதொரு பதிவு செய்யப்பட்ட குறி துவிச்சக்கர வண்டிகளைச் சந்தைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

(100 புள்ளிகள்)

4. கொழும்பிலுள்ள புதுமுறைகாண் மென்பொருள் நிறுவனமொன்றின் (innovative software firm) நிறுவன சட்ட ஆலோசகரென உம்மைக் கருதிக்கொள்க. வியாபார இரகசியத் திருட்டு மற்றும் வழக்குகள் அதிகரித்து வருவதனைக் கருத்தில் கொண்டு, ''இலங்கையில் வணிக இரகசியங்களுக்கான சட்டப்பாதுகாப்பு'' எனும் தலைப்பில் நிறுவனத்தின் மென்பொருள் வடிவமைப்பாளர்களுக்கு விளக்கவுரையொன்றினை அளிக்குமாறு நிறுவனத்தின் உயர் நிர்வாகமானது உம்மைக் கோருகின்றது. உம்முடைய விளக்கவுரையின் போது குறிப்பிட்ட பின்வரும் விடயங்களை உள்ளடக்குமாறு வேண்டப்படுகின்றீர்:

(அ) வரைவிலக்கணம், பரப்பெல்லை மற்றும் வணிக இரகசியங்கள் பாதுகாப்பின் முக்கியத்துவம்;

(ஆ) சர்வதேச மற்றும் தேசியச் சட்டப்பாதுகாப்புப் பொறிமுறை;

(இ) வணிக இரகசியங்களைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய படிமுறைகள் ; மற்றும்

(ஈ) வணிக இரகசியப் பாதுகாப்புடன் தொடர்புடைய நன்மை மற்றும் தீமைகள்.

உமது விளக்கவுரையானது பொருத்தமான சட்ட ஏற்பாடுகள், தீர்ப்புச்சட்டம் மற்றும் நடைமுறை உதாரணங்களின் அடிப்படையில் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்

(100 புள்ளிகள்)

5. ‘உற்பத்திகளின் தரம் மற்றும் அதன் தோற்றம் ஆகியவற்றைக் குறித்துக்காட்டுவதாக புவியியற் குறியீடுகள் (geographical indications) நுகர்வோர்களால் விளங்கிக்கொள்ளப்படுகின்றன. அவற்றில் பல மதிப்புமிக்க நற்பெயர்களை பெற்றிருப்பினும் அவை போதுமானவகையில் பாதுகாக்கப் பட்டிராவிட்டால் நேர்மையற்ற வியாபாரச் செயற்பாட்டாளர்களால் திரிவுபடுத்தப்படலாம். அங்கீகாரமளிக்கப்படாத நபர்களால் புவியியற் குறியீடுகள் தவறாகப் பயன்படுத்தப்படும் போது நுகர்வோர்களுக்கும் நெறிமுறையான உற்பத்தியாளர்களுக்கும் பாதிப்பினை விளைவிக்கும்.’

மேற்குறிப்பிட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கையின் புவியியற் குறியீடுகளைப் பாதுகாப்பது தொடர்பான பொருத்தமான ஏற்பாடுகளை விமர்சன ரீதியாக ஆராய்ந்தும், புவியியற் குறியீடுகளின் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காகத் தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளை எவ்வாறு திருத்தப்படலாம் என்பதனையும் பகுப்பாய்வு செய்க.

(100 புள்ளிகள்)

6. நியாயமற்ற போட்டி மற்றும் வணிகப் போலிச் செயல் (*passing off*) ஆகிய இரண்டிற்கும் எதிரான பாதுகாப்பானது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டிருப்பதனை வழக்குச்சட்டச் சட்டவியலினது கவனமாதொரு துண்ஆய்வு வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

நியாயமற்ற போட்டியின் என்ற பரந்ததொரு கருத்தேற்பானது திரிவுபடுத்துரைத்தலுக்கு எதிரான பாதுகாப்பினை பாதுகாப்பினை வழங்குகின்ற அதேவேளை பொதுச்சட்டக் கோட்பாடான வணிகப் போலி என்பது திரிவுபடுத்துரைத்தல் போன்ற செயல்களுக்கும் பிரயோகிக்கப்படக்கூடியதாகும் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

மேற்குறிப்பிட்ட கூற்றின் பின்னணியில், இலங்கையில் நியாயமற்ற போட்டி மற்றும் வணிகப் போலி என்பவற்றிற்கு எதிரான பாதுகாப்பு தொடர்பான சட்டத்தின் ஏற்புடமை குறித்து விமர்சன ரீதியாக ஆராய்க. பொருத்தமான சட்டக்கோட்பாடுகள், நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் வழக்குச்சட்டச் சட்டவியல் ஆகியவற்றினைத் தொடர்புறுத்தி உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(100 புள்ளிகள்)

*******************